C.P.No. 92/2018
Date.04.01.2020
Witness: WW 1 Thiru.V.Gokilavarathan

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி- மாருதி எக்ஸ்போர்ட் என்பது என் பெயரில் உள்ள தனி நபர் நிறுவனம் என்றால் ஆமாம், ஆனால் அந்த நிறுவனம் திரு.ராஜகோபால் அவர்கள் ஏற்பாடு செய்து ஆரம்பிக்கப்பட்டது, அந்த நிறுவனத்தின் மூலம் எந்த Transaction னும் நடைபெறவில்லை. அந்த நிறுவனத்திற்கான Export License என் பெயரில் உள்ளது என்றால் அந்த நிறுவனத்திற்கு என்னென்ன ஆவணங்கள் தேவையோ அவை நானும் திரு.ராஜகோபால் அவர்களும் சேர்ந்து வாங்கினோம். மாருதி எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் உரிமம் எண்.3217503376 என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த நிறுவனம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2018 ம் ஆண்டில், எதிர்மனுதாரர் என்னை வெளியே அனுப்புவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. ராஜகோபால் என் பெயரில் அந்த நிறுவனத்தை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சட்டவிரோத இழப்பு ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் அந்த நிறுவனத்தை நான்தான் ஆரம்பித்தேன் என்றும் சொன்னால் அது பொய். STV Shipping நிறுவனத்தின் பங்குதாரர் ஒப்பந்தம் என்னிடம்தான் உள்ளது என்றால் இல்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வருகைப்பதிவேடு எந்த தேதியில் இருந்து பராமரிக்கப்படுகிறது என்றால் கம்பெனி ஆரம்பித்த தேதியில் இருந்தே பராமரிக்கப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் Ex.W.1 Mail , நிர்வாகம் எனக்கு அனுப்பியது என்றால் எனக்கும் மற்றொரு பணியாளர் காடேஷ் என்பவருக்கும் அனுப்பியது. Ex.W.1 Mail கடிதத்திற்கு அனுப்பப்பட்ட பதில் சம்பந்தமாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த கடிதத்திற்கு நான் பதில் அனுப்பினேனா என்பது ஞாபகம் இல்லை. 01.04.2010 தேதியில்தான் எதிர்மனுதாரர்

நிறுவனம் நிறுவப்பட்டது என்றால் சரியல்ல. ஏப்ரல் 2007 லேயே நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணி செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. Ex.W2 ல் நான் முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கான Incentive கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம், ஆனால் நான் ஒவ்வொரு ஆண்டும் Incentive கேட்டபோது நிர்வாகம் ஏதாவது ஒரு காரணம் சொல்லி Incentive வழங்காமல் இருந்துவந்தது, கடைசி இரண்டு ஆண்டுகள் வழங்க முயற்சிப்பதாகவும் அதற்கு Mail அனுப்பும்படியும் நிர்வாகம் கேட்டுக்கொண்டதால் நான் Ex.W.2 Mail அனுப்பினேன். Sales Target achieve செய்தால்தான் Incentive வழங்கப்படும் என்றால் ஆமாம். நிர்வாகம் எனக்கு எந்த முறையில் சம்பளம் மற்றும் இதர பணப்பலன்கள் வழங்கும் என்றால் நிர்வாகம் என் பெயரில் Cheque வழங்கும். (தற்போது சாட்சி ஆரம்ப காலங்களில் பணத்தை எனது வங்கிக்கணக்கில் செலுத்தி வந்தது என்றும் பிறகு On line transaction நிறுத்தப்பட்டதாக கூறி 2010 ம் ஆண்டுக்கு பிறகு பணத்தை காசோலை மூலம் வழங்கிவந்தது என்றும் கூறுகிறார்.). நான் தாக்கல் செய்துள்ள Ex.W.5 எனது வங்கி கணக்கு சம்பந்தமான Pass book ன் முதல் பக்கம் மட்டும்தான் என்றும் அந்த வங்கி கணக்குகளில் ஏற்பட்ட பரிவர்த்தனைகள் அதில் இணைக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான், தேவையெனில் வங்கிக்கணக்கு பரிவர்த்தனைகள் சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள Ex.W.3 Mail கடிதத்தில் நிர்வாகம் நான் வேலைக்கு சரியாக வருவதில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளது என்றால் சரிதான், நான் போன்மூலம் திரு.ராஜகோபால் அவர்களுக்கு காலையில் மார்க்கெட்டிங் சம்பந்தமான பணிகளுக்கு செல்வதை தெரிவிப்பேன், அலுவலக வேலை பார்ப்பதற்கு மார்க்கெட்டிங் வேலை முடித்துவிட்டு வருவேன், ஆனால் நிர்வாகம் ஏதாவது ஒரு காரணம் வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த Mail ஐ தயாரித்துள்ளது. நான் Ex.W3 Mail கடிதத்தில் எனது நன்பர்களின் நிறுவனங்களுக்காக மார்க்கெட்டிங் போகவேண்டியுள்ளது என்றும் அதனால்

நான் எதிர்மனுதாரர் நிர்வாக அலுவலகத்திற்கு காலையில் வரமாட்டேன் என்றும் கூறியுள்ளேன் என்றால் அது பொய், நான் அந்த பொருளில் அவ்வாறு கூறவில்லை. நான் எங்களுக்கிடையில் ஏற்பட்ட Main correspondence முழுமையாக தாக்கல் செய்யாமல் எனக்கு தேவையான பகுதிகளை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் STV Shipping Line நிறுவனத்தின் 28.08.2015 தேதியிட்ட SEA IMPORT INVOICE புகைப்பட நகலில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் ஆமாம். ( மேற்படி INVOICE புகைப்பட நகல் என்பதால் அதனை குறியீடு செய்ய மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டதால் அது குறியீடு செய்யப்படவில்லை) . இந்த INVOICE அசல் வாடிக்கையாளரிடம் இருக்கும் என்றால் அது உண்மையான INVOICE ஆக இருந்தால் வாடிக்கையாளரிடம் அசல் INVOICE இருக்கும். STV Shipping Line நிறுவனத்திற்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தின் Service Tax Registration எண் ஐ பயன்படுத்தி மோசடியாக Invoice தயார் செய்து எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சுமார் ரூ.1,97,000/- மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நிறுவனத்தின் Service Tax Registration எண் ஐ பயன்படுத்திதான் நான் IDBI வங்கியில் STV Shipping Line வங்கிக்கணக்கை ஆரம்பித்தேன் என்றால் அது பொய். எந்த ஒரு நிறுவனமும் அதனுடைய Service Tax Registration நெம்பர் பயன்படுத்த போட்டி நிறுவனத்திற்கு அனுமதி வழங்காது என்றால் இது போட்டி நிறுவனம் அல்ல. மேற்படி இரண்டு நிறுவனங்களையும் என்னை ஆரம்பிக்கும்படி திரு.ராஜகோபால் எனக்கு Mail அனுப்பியதாகவோ அல்லது வேறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுனத்தில் நான் பணிபுரிந்ததால் எனக்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தின் Service Tax Registration நெம்பர் மற்றும் PAN Number அலுவலக ரீதியாக தெரியவந்தது என்றும் அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பதிவு எண்களை தவறாக பயன்படுத்தி மேற்படி இரண்டு

நிறுவனங்களையும் ஆரம்பிக்க முடிந்தது என்றால் அது பொய். எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கிய Ex.W.6 வேலை நீக்க உத்தரவை ஆட்சேபனை செய்து நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஒவ்வொரு வருடமும் நான் achieve செய்த sales target தொகையை குறிப்பிட்டு அதற்கு இவ்வளவு incentive நிர்வாகம் வழங்கவேண்டும் என்று குறிப்பாக ஒவ்வொரு வருடத்திற்கும் தனியாக கணக்கு விபரம் இம்மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், incentive தொகை மொத்தமாக குறிப்பிட்டுள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் எனக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் இவ்வளவு incentive தொகை வழங்கவேண்டும் என்று உறுதி செய்து எந்த நீதிமன்றத்திலும் நான் உத்தரவு வாங்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல நிர்வாகம் 14 ஆண்டுகள் எனக்கு Incentive வழங்காமல் இருந்திருந்தால் நான் Ex.W. 2 Mail கடிதத்தில் 9 ஆண்டுகளுக்கு incentive கேட்டிருப்பேன் என்றும் ஆனால் அந்த கடிதத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே நான் incentive கேட்டுள்ளதால் நான் மனுவில் கேட்டுள்ளது தவறு என்றால் அது பொய், நான் பல ஆண்டுகளாக நிர்வாகம் incentive வழங்கவில்லை என்று ஆட்சேபனையை Mail கடிதம் மூலம் நிர்வாகத்திற்கு தெரிவித்துள்ளேன். 2011 முதல் 2018 வரை எனக்கு கிடைக்க வேண்டிய increment தொகைகள் முறையாக காசோலைகள் மூலமாகவும், வங்கி கணக்கில் Deposit செய்த வகையிலும் நிர்வாகம் செலுத்திவிட்டது என்றால் அது பொய். அவ்வாறு நிர்வாகம் தொகை செலுத்திய விபரங்கள் தெரிந்துவிடும் என்பதால்தான் நான் கணக்கு பரிவர்த்தனை தாள்களை தாக்கல் செய்யாமல் பாஸ் புத்தகத்தின் முதல் தாள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பொய். Achieved target ல் 15% Incentive என்பது குறித்து எந்த ஒப்பந்தமும் எதிர்மனுதாரர் நிர்வாகம் செய்துகொள்ளவில்லை என்றும், நான் எந்த வருடத்திலும் target achieve செய்யவில்லை என்றும் அதனால் நிர்வாகம் எனக்கு incentive கொடுக்க

வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் அது பொய். நான் பணி செய்த காலத்தில் **Achieve** செய்த **target** சம்பந்தமாக எந்த விபரங்களும் மனுவிலும் , பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான், அந்த விபரங்கள் எதிர்மனுதாரர் நிர்வாகத்திடம் தான் இருக்கும். உண்மையிலேயே நான் **Sales target achieve** செய்திருந்தால் அது சம்பந்தமான ஆவணங்களை, நிர்வாகத்தின் வருகைப்பதிவேட்டை தாக்கல் செய்துள்ளது போலவே, தாக்கல் செய்திருப்பேன் என்றும் **Sales target achieve** செய்யவில்லை என்பதால்தான் நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 2004 முதல் பணிபுரிவதாகவும், 2007 ம் ஆண்டு முதல் பணிபுரிவதாகவும் முரண்பட்ட சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை, 2007 ம் ஆண்டு முதல்தான் பணிபுரிந்தேன். நான் இந்த மனுவில் கோரியுள்ளதுபோல ரூ.11,08,000/-அல்லது வேறு எந்த தொகையும் நிர்வாகம் எனக்கு வழங்கவேண்டிய சட்டப்படியான கடப்பாடு இல்லை என்றால் சரியல்ல. வாடிக்கையாளர்களிடம் இருந்து எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வரவேண்டிய தொகை சுமார் ரூ.26,00,000/- நான்தான் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு செலுத்தவேண்டியுள்ளது என்றால் சரியல்ல. **Incentive** மற்றும் **Increment** தொகைகள் அறுதியிட்டு கூற முடியாத நிலையில் நான் இந்த மனுவில் கோரியுள்ள தொகைகள் நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. **SEA GARD LOGISTIC** என்ற நிறுவனத்தில் நான் பணிபுரிந்தேனா என்றால் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியில் சேர்வதற்கு முன்பு அந்த நிறுவனத்தில் பணிபுரிந்தேன். நான் என் கோரிக்கையை உரிய ஆவணங்களுடன் நிரூபிக்கவில்லை என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.